www.Padasalai.Net www.CBSEtips.in

**வகுப்பு : 11**

தேர்வு எண் | | | | | | |

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு-நவம்பர்-2023

நேரம் : 1.30 மணி] **தமிழ்** [மொத்த மதிப்பெண்கள் : 45

பகுதி – I

**I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.(பலவுள் தெரிக)** 7x1=7

1. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளுள் ஒன்று

அ) சாழல் ஆ) சிற்றில் இ) சிறுதேர் ஈ) சிறுபறை

2. "பூ" என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது; "கவிதை கிரீடம்" என்று போற்றப்படுவது

அ) சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி ஆ) கவிதை நூல், திருச்சாழல்

இ) நாளிதழ், குற்றாலக் குறவஞ்சி ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

3. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

4. "புரட்சிக்கவி" யை இயற்றியவர் ------

அ) வள்ளலார் ஆ) பாரதியார் இ) பாரதிதாசன் ஈ) சுரதா

5. "ஜனப்பிரளயம்" என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?

அ) மக்கள் அலை ஆ) உயிர் அலை இ) மக்கள் வெள்ளம் ஈ) மக்கள் அவை

6. "அழகும் அறிவும் இளமையும் வாய்த்தவன்" – யார் யாரிடம் கூறியது?

அ) அமைச்சர் கவிஞரிடம் ஆ) மன்னர் அமைச்சரிடம்

இ) அமைச்சர் மன்னரிடம் ஈ) மன்னன் அமுதவல்லியிடம்

7. கீழுள்ளவற்றைப் பொருத்தி விடை தருக.

அ) விரியன் – தண்டை

ஆ) திருமுருகு – காலாழி

இ) நாங்கூழ்ப்புழு – சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி – பாடகம்

அ) 3 4 2 1 ஆ) 3 1 4 2 இ) 4 3 2 1 ஈ) 4 1 3 2

**II. எவையேனும் நான்கனுக்கு விடை தருக.** 4x2=8

8. உழைப்பாளர்கள் தோள் வலிமையால் விளைந்தன யாவை?

9. செந்துறைப் பாடாண்பாட்டு – விளக்கம் தருக.

10. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

11. "நாழிக்குள் தினிக்கும் மருந்துபோல்" என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக.



vivo Y16
Nov 07, 2023 21:14
Kindly send me your study materials to padasalai.net@gmail.com
www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in

12. ஒலோகமாதேவீச்சுரம் கோவில் கல்வெட்டில் காணலாகும் பெண் அதிகாரிகளின் பெயர்களிலிருந்து நீங்கள் அறிவது யாது?

III. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 2x2=4

13.கலைச்சொல்லாக்கம் தருக.

அ) Myth தொன்மம் ஆ) Disaster பேரழிவு

14.ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

அ) துய்த்தல் ஆ) அயர்ந்து

IV. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்க. 3x4=12

15. ஃபிரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?

16. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

17. "உயிர்தமிழை உயிரென்று போற்றுமின்கள்" –இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

18. ஜீவாவின் பேச்சு நடை குறித்துச் சுந்தரராமசாமி கூறுவன யாவை?

19. உணவும் உறக்கமும் அணில் கனவாம்; உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக.

V. பின்வரும் வினாக்களுக்கு விடையளி. 2x5=10

20. "கல்லும் கதை சொல்லும்" - என்னும் தொடர் தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

(அல்லது)

பாரதிதாசன் ஒரு "புரட்சிக்கவி" என்பதை உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

21. சிந்தனைப் பட்டிமன்றத்தின் நிகழ்வுகளைச் சுவை குன்றாமல் தொகுத்து எழுது.

(அல்லது)

சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

VI. பின்வரும் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

22. "சிற்றூரும்...... எனத் தொடங்கும் புரட்சிக்கவி பாடலை எழுதுக. 1x4=4

www.Padasalai.Net



Kindly send me your study materials to padasalai.net@gmail.com